THE HINDU (TAMIL)

14 APR 2022

PAGE 8



இந்து தமிழ் திசை

# பொறியியல் படிப்புகளை முடிக்காமல் உள்ளோருக்கு கூடுதலாக இரு வாய்ப்புகள்

## ● கல்லூரிகளுக்கு புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் உத்தரவு

**புதுச்சேரி**

பாடங்களில் தேர்ச்சி பெறாமல் பொறியியல் படிப்புகளை முடிக்க முடியாதவர்களுக்கு கூடுதலாக இரு வாய்ப்புகளை தர புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகக்கழகம் அனைத்து பொறியியல் கல்லூரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் தேர்வுகள் நடத்தவும் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாளர் சதானந்த் ஜி. சுவாமி அனைத்து பொறியியல் கல்லூரி முதல்வர்களுக்கும் அனுப்பியுள்ள உத்தரவு விவரம்:

அகாதெமி கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஜூலை 22 மற்றும் டிசம்பர் 22 ஆகிய தேதிகளில் நடைபெறும் தேர்வுகளில், இணைப்புக் கல்லூரிகளின் அனைத்து பி.டெக் மாணவர்களுக்கும் கூடுதலாக இரண்டு வாய்ப்புகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

> ▼ **பல்கலைக்கழக இணையதளத்தில் பார்த்து இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.**

கல்வி ஆண்டு 2006-07 முதல் 2014-15 வரை அனுமதிக்கப்பட்ட (சீரியல் 27,28,29,10,10T,11T,12T,13T,14T.) அந்தந்த விதிமுறைகளில் பரிந்துரைக்கப்பட்ட அதிகபட்ச காலத்திற்குள் படிப்புகளை முடிக்க முடியாதவர்கள் அவர்களின் நிலுவைத் தாள்களை எழுதவும், அவர்களின் பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடிக்கவும் அவர்களை அனுமதிக்கிறது.

ஜூலை -22 மற்றும் டிசம்பர்-22 அமர்வுகளுக்கான தேர்வு அறிவிப்புகள் உரிய நேரத்தில் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். கல்லூரி/மாணவர்கள் பதிவு / பாடத்திட்டம் / அட்டவணை குறித்த புதுப்பிப்புகளை அவ்வப்போது பல்கலைக்கழக இணையதளத்தில் பார்த்து இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கல்லூரிகள் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு அஞ்சல், கடிதம் மற்றும் சுற்றறிக்கை போன்றவற்றின் மூலம் தெரியப்படுத்த வேண்டும். மாணவர்கள் பட்டப்படிப்பை முடிக்க உதவும் வகையில் பல்கலைக்கழகம் வழங்கிய கூடுதல் வாய்ப்புகளைப் பற்றி தெரிவிக்க வேண்டும். பதிவு செய்யும் மாணவர்கள் ரூ. 5 ஆயிரம் கட்டணம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு தியரி, நடைமுறைத்தாளுக்கும் கட்டணமாக தலா ரூ. 1,000 செலுத்த வேண்டும். இவ்வாய்ப்பை பயன்படுத்த விரும்பும் மாணவர்களின் பட்டியலை நிலுவைத்தாள் விவரங்களுடன் சேகரித்து இம்மாத இறுதிக்குள் தேர்வுகளைத் திட்டமிட்டு, சுமூகமாக கல்லூரிகள் நடத்த வேண்டும். இதன் விவரங்களை பல்கலைகழகத்தில் சமர்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

DINAMALAR

14 APR 2022

PAGE 11



தூய காற்று பெற மரம் வளர்ப்போம்

# PONDICHERRY UNIVERSITY
## ENGINEERING WING

No: PU/EW/Tender/2021-22/10569 Date: 12.04.2022

## SHORT TENDER NOTICE

For and on behalf of Pondicherry University, the Head(i/c), Engineering wing, Pondicherry University invites sealed item rate tenders from the eligible contractors for the work of:

1. Providing aluminium partition to bifurcate the class room into 5 cabins to accommodate recently joined faculty members at Centre for Green Energy Technology, Pondicherry University.

Estimate cost: Rs.2,18,729/-

The tender forms and other details may be downloaded from website https://eprocure.gov.in/eprocure/app & www.pondiuni.edu.in and must be submitted through https://eprocure.gov.in/eprocure/app ONLY.

**Head(i/c)**
**Engineering Wing**

DINAKARAN

14 APR 2022

PAGE 8

# பொறியியல் படிப்பை முடிக்க முடியாதவர்களுக்கு இரு வாய்ப்பு

## புதுவை பல்கலைக்கழகம் அனுமதி

புதுச்சேரி, ஏப். 14: புதுச்சேரி பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாளர் சதானந்த் ஜி. சுவாமி அனைத்து பொறியியல் கல்லூரி முதல்வர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

அகாடமி கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி 2022ம் ஆண்டு ஜூலை மற்றும் 2022ம் ஆண்டு டிசம்பர் ஆகிய இரு அமர்வுகளில் நடைபெறும் தேர்வுகளில், இணைப்பு கல்லூரிகளின் அனைத்து பி.டெக் மாணவர்களுக்கும் கூடுதலாக இரண்டு வாய்ப்புகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கல்வி ஆண்டு 2006-07 முதல் 2014-15 வரை அனுமதிக்கப்பட்ட (சீரியல் 27, 28, 29, 10, 10T, 11T, 12T, 13T, 14T) அந்தந்த விதிமுறைகளில் பரிந்துரைக்கப்பட்ட அதிகபட்ச காலத்திற்குள் படிப்புகளை முடிக்க முடியாதவர்கள் அவர்களின் நிலுவை தாள்களை எழுதவும், அவர்களின் பட்டப்படிப்பை முடிக்கவும் அவர்களை அனுமதிக்கிறது. 2022ம் ஆண்டு ஜூலை மற்றும் டிசம்பர் ஆகிய இரு அமர்வுகளுக்கான தேர்வு அறிவிப்புகள் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். கல்லூரி மாணவர்கள் பதிவு, பாடத்திட்டம், அட்டவணை குறித்த புதுப்பிப்புகளை அவ்வப்போது பல்கலைக்கழக இணையதளத்தில் பார்த்து இவ்வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கல்லூரிகள் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு அஞ்சல், கடிதம் மற்றும் சுற்றறிக்கை போன்றவற்றின் மூலம் தெரியப்படுத்த வேண்டும். மாணவர்கள் பட்டப்படிப்பை முடிக்க உதவும் வகையில் பல்கலைக்கழகம் வழங்கிய கூடுதல் வாய்ப்புகளை பற்றி தெரிவிக்க வேண்டும். பதிவு செய்யும் மாணவர்கள் ரூ.5,000 கட்டணம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு தியரி, நடைமுறை தாளுக்கும் கட்டணமாக தலா ரூ.1000ம் செலுத்த வேண்டும். இவ்வாய்ப்பை பயன்படுத்த விரும்பும் மாணவர்களின் பட்டியலை நிலுவைத்தாள் விவரங்களுடன் சேகரித்து இம்மாத இறுதிக்குள் தேர்வுகளை திட்டமிட்டு சுமுகமாக கல்லூரி நடத்த வேண்டும். இதன் விவரங்களை பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

DINAMANI

14 APR 2022

# பொறியியல் பாடங்களில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்பு

## புதுவை பல்கலை. அறிவிப்பு

புதுச்சேரி, ஏப்.13: பொறியியல் பாடங்களில் தேர்ச்சி பெறாமல், படிப்புகளை முடிக்க முடியாத மாணவர்களுக்கு கூடுதலாக இரண்டு வாய்ப்புகளைத் தருவதற்கு புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் அனைத்து பொறியியல் கல்லூரிகளுக்கும் உத்தரவிட்டது.

இதுகுறித்து புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பட்டாளர் சதானந்த் ஜி.சுவாமி, அனைத்து பொறியியல் கல்லூரிகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

புதுவை பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற அகாதெமி கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, வருகிற ஜூலை 22, டிசம்பர் 22 ஆகிய தேதிகளில் நடைபெறும் தேர்வுகளில், இணைப்புக் கல்லூரிகளின் அனைத்து பி.டெக். மாணவர்களுக்கும் கூடுதலாக இரண்டு வாய்ப்புகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 2006 - 2007 கல்வியாண்டு முதல் 2014 - 15 கல்வி ஆண்டு வரை (விதிமுறைகளில் பரிந்துரைக்கப்பட்ட) அதிகபட்ச காலத்துக்குள் படிப்புகளை முடிக்க முடியாதவர்கள், அவர்களின் பாட நிலுவைத் தாள்களை எழுதவும், அவர்களின் பட்டப்படிப்பை முடிக்கவும் அனுமதிக்கிறது.

இதற்காக ஜூலை - 22, டிசம்பர் - 22 அமர்வுகளுக்கான தேர்வு அறிவிப்புகள், உரிய நேரத்தில் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். இதனால், கல்லூரிகள்/ மாணவர்கள் பதிவு / பாடத் திட்டம் / அட்டவணை குறித்த புதுப்பிப்புகளை, அவ்வப்போது பல்கலைக்கழக இணையதளத்தில் பார்த்து, இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் பட்டப்படிப்பை முடிக்க உதவும் வகையில், பல்கலைக்கழகம் வழங்கிய கூடுதல் வாய்ப்புகளைப் பற்றி அந்தந்தக் கல்லூரிகள், சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

பதிவு செய்யும் மாணவர்கள் ரூ.5,000 கட்டணம் செலுத்த வேண்டும்.

இந்த வாய்ப்பை பயன்படுத்த விரும்பும் மாணவர்களின் பட்டியலை, நிலுவைத்தாள் விவரங்களுடன் சேகரித்து, இந்த மாத இறுதிக்குள் தேர்வுகளைத் திட்டமிட்டு, கல்லூரிகள் நடத்த வேண்டும்.

இதன் விவரங்களை பல்கலைகழகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

THE HINDU

14 APR 2022

PAGE 4

# Pondicherry varsity offers a chance to complete B. Tech

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Pondicherry University has decided to give two additional chances to B. Tech students of affiliated colleges, who were admitted from 2006-07 to 2014-15 and could not complete the courses within the stipulated duration, to sit for the arrears examinations.

**Notification soon**

An official said the Academic Council met on March 18 and took the decision. The notification of the examinations for the July 22 and December 22 sessions will be put up on the university website shortly. Students are requested to look up the website for updates on registration, syllabus and schedule.

They will have to pay ₹5,000 in registration fee and ₹1,000 for each theory and practical exam.